EC5150





# நிலாவின் பயணம்



பாபுவும் நிலாவும் நண்பர்கள்



ஒரு நாள், நிலா பாபு வீட்டிற்குச் சென்றுவர நினைத்தது.





காந்தி சிலையிடம் பாபுவின் வீடு
எங்கே  என்று கேட்டது?




காந்தி சிலை, “எனக்குத் தெரியாது
அந்தக் கடையில் போய் கேள்” என்றது.






கடை, “எனக்குத் தெரியாது அந்தப் பள்ளியில் போய் கேள்” என்றது.










**பள்ளியில் இருந்த பாபு, நிலாவைப் பார்த்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.**



கோவில், கடை, குளம், பூங்கா என்று எல்லா இடங்களுக்கும் நிலாவை அழைத்துச் சென்றான். இருவரும் மகிழ்ச்சியோடு விளையாடினர்.







இரவு வந்தது. பாபு தூங்கினான்.
நிலா திரும்பவும் வானத்திற்கே சென்றுவிட்டது.